# March 18, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. ஆப்கானிஸ்தான் மருத்துவமனை மீது பாகிஸ்தான் நடத்திய வான்வழித் தாக்குதலில் 400 பேர் உயிரிழந்தனர். 250 பேர் காயமடைந்தனர்.

(i) பாகிஸ்தானில் தெஹ்ரீக்-ஏ-தலிபான் பாகிஸ்தான் என்ற பயங்கரவாத அமைப்பு தொடர்ந்து பயங்கரவாதத் தாக்குதல் நடத்தி வந்தது. இந்த அமைப்பு ஆப்கானிஸ்தானில் ஆட்சியில் உள்ள தலிபான் இயக்கத்தின் கிளை அமைப்பாகும்.

(ii) இந்த அமைப்புக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆப்கானிஸ்தானின் தலிபான் அரசிடம் பாகிஸ்தான் தொடர்ந்து வலியுறுத்தியபோதிலும், அதை தலிபான் அரசு செய்யவில்லை.

(iii) பயங்கரவாதிகளுக்கு தலிபான் அரசு அடைக்கலம் அளிப்பதாக பாகிஸ்தான் குற்றஞ்சாட்டிய நிலையில், பாகிஸ்தான்-ஆப்கானிஸ்தான் படைகள் இடையே பழிக்குப் பழியாக எல்லை தாண்டி தாக்குதல் நடத்தப்பட்டு வந்தது.

(iv) இதைத்தொடர்ந்து ஆப்கானிஸ்தானுடன் நேரடியாகப் போரில் ஈடுபட பாகிஸ்தான் முடிவு செய்தது. இதையடுத்து பாகிஸ்தான் ராணுவம் மற்றும் ஆப்கானிஸ்தானின் தலிபான் படைகள் பரஸ்பரம் கடுமையான தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றன. இருநாட்டு எல்லையில் பாகிஸ்தான் ராணுவமும், ஆப்கானிஸ்தானின் தலிபான் படையினரும் தொடர்ந்து மோதலில் ஈடுபட்டு வரும் நிலையில், ஆப்கானிஸ்தான் மீது பாகிஸ்தான் வான்வழித் தாக்குதல் நடத்தி வருகிறது.

(v) இந்நிலையில், ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் உள்ள மருத்துவமனை மீது பாகிஸ்தான் நடத்தியவான்வழித் தாக்குதலில், அந்த மருத்துவமனை மீது குண்டுகள் வெடித்து கடுமையான சேதம் ஏற்பட்டது.

2. சிவகங்கை மாவட்டத்திலுள்ள கீழடி உள்பட தமிழகத்தின் 8 இடங்களில் அகழ்வாராய்ச்சிப் பணிகளை மேற் கொள்வதற்கு மத்திய தொல்லியல் துறை ஒப்புதழ் வழங்கியுள்ளது.

(i) கடந்த 1959-ஆம் ஆண்டின் பழங்கால நினைவுச் சின்னங்கள் மற்றும் தொல்பொருள் இடங்கள் மற்றும் எச்சங்கள் விதிகளின் கீழ், நிபுணர் குழுவின் பரிந்துரையை ஏற்று இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ii) 8 இடங்களில் அகழாய்வு:

- எனவே, மத்திய அரசு வழங்கியுள்ள ஒப்புதலின் அடிப்படையில், சிவகங்கை மாவட்டத்தின் கீழடி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் 11-ஆம் கட்ட ஆய்வுகள் நடத்தப்படவுள்ளன.
- இதுதவிர தூத்துக்குடி மாவட்டம் பட்டினமருதூர், தென்காசி மாவட்டம் கரிவலம்வந்தநல்லூர், கடலூர் மாவட்டம் மணிக் கொல்லை, விழுப்புரம் மாவட்டம் ஆதிச்சனூர், கோவை மாவட்டம் வெள்ளலூர், சேலம் மாவட்டம் தெலுங்கனூர்-மாங்காடு மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் உள்ள முக்கிய வரலாற்றுத் தலங்களிலும் அகழ்வாராய்ச்சிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.
- தமிழகத்தின் பல்வேறு நிலப்பரப்புகளில் வாழ்ந்த பண்டைய தமிழர்களின் வாழ்வியல் முறைகளை ஒட்டுமொத்தமாகப் புரிந்துகொள்ள இந்த விரிவான ஆய்வுகள் பெரிதும் உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

3. வெம்பக்கோட்டை அகழாய்வில் ‘தர்பீடோ' குடுவை வடிவப் பானை ஓடுகள் கிடைத்தன. இது தொல் தமிழர் கடல் வாணிப வரலாற்றுக்கு பெரும் சான்று என அமைச்சர் தங்கம் தென்னரசு எக்ஸ் வலைதளத்தில் பதிவு செய்தார்.

(i) விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை விஜயகரிசல்குளம் பகுதியில் தமிழக அரசின் தொல்லியல் துறை சார்பில் மூன்று கட்டங்களாக அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது.

(ii) இதில் சுடுமண் முத்திரைகள், கண்ணாடி மணிகள், சங்கு வளையல்கள், தங்க மணிகள், செவ்வக விளையாட்டுப் பொருள்கள், நுண்கற்காலக் கருவிகள், பாசிமணிகள், சுடுமண்ணாலான காதணிகள், பொம்மைகள், மோதிரங்கள், சில்லு வட்டுகள், இரும்பு உருக்கு கழிவுகள், யானைத் தந்தத்தால் செய்யப்பட்ட பொருள்கள் என பல்வேறு அரிய தொல்பொருள்கள் கிடைத்தன.

(iii) மூன்று கட்ட அகழ்வாய்விலும் கிடைத்த தொல்பொருள்களையும், பானையோடுகளையும் தரம் பிரிக்கும் பணியின்போது தர்பீடோ எனப்படும் குடுவை வடிவ பானை ஓடுகள் கண்டறியப்பட்டன. இந்த ஓடுகள் ரோமானிய, மத்திய கிழக்குப் பகுதிகளிலிருந்து ஆலிவ் எண்ணெய், ஒயின் போன்ற திரவப் பொருள்களைக் கொண்டுவர பயன்படுத்தப்பட்டவை என வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். தற்போது வெம்பக்கோட்டையில் கிடைத்த தர்பீடோ குடுவை ஓடுகள் மூலம் கடல் வழியாக வைப்பாற்றங்கரையில் வாணிபம் நடைபெற்றது நிரூபணமாகிறது.

(iv) இது பண்டைய தமிழர்களின் கடல் வாணிபத் திறனை உறுதிப்படுத்தும் முக்கிய ஆதாரமாகும். இந்த நிலையில், கடல் வாணிபத்தின் சான்றாக 'தர்பீடோ' குடுவை வடிவப்பானை ஓடுகள் கண்டறியப்பட்டது பண்டைய தமிழ் நில வாணிபர்கள் குறித்த வரலாற்றுக்கு மற்றுமொரு ஆதாரமாக அமைந்துள்ளது என அமைச்சர் தங்கம் தென்னரசு கூறினார்.

4. யு 20 மும்முறை தாண்டுதலில் ஆசிய அளவில் முதலிடம் பெற்று சென்னை எஸ்ஆர்எம் ஐஎஸ்டி வடபழனி வளாக மாணவி சாதனா ரவி சாதனை படைத்துள்ளார்.

(i) பிஎஸ்சி உளவியல் முதலாம் ஆண்டு மாணவியான சாதனாரவி தடகள வீராங்கனை ஆவார். மும்முறை தாண்டுதல், நீளம் தாண்டுதலில் சிறந்து விளங்கும் அவர் யு20 பிரிவில் மும்முறை தாண்டுதலில் ஆசிய மற்றும் இந்திய அளவில் முதலிடம் பெற்றுள்ளார்.

(ii) மேலும் உலகளவில் 12-ஆவது இடத்தில் தரவரிசையில் இடம் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

5. பாரத் டாக்ஸி தளத்தில் 21.34 லட்சம் பயனர்கள் மற்றும் 2.31 லட்ம் ஓட்டுநர்கள் பதிவு செய்துள்ளதாக மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அமித் ஷா

தெரிவித்தார்.

(i) 8 கூட்டுறவு நிறுவனங்களால் பாரத் டாக்ஸி சேவை நிகழாண்டு பிப்ரவரி 5-ஆம் தேதி அறிமுகப்படுத்தப்பட்டது. இது தற்போது தில்லி, குருகிராம், நொய்டா, ஃபரீதாபாத், காஜியாபாத் மற்றும் அகமதாபாத், ராஜ்கோட், சோம்நாத் மற்றும் துவாரகா ஆகிய சில நகர்ப்பகுதிகளில் மட்டுமே செயல்பாட்டில் உள்ளது.

(ii) இதுதொடர்பாக மக்களவையில் அமித் ஷா அளித்த எழுத் துபூர்வ பதிலில், ‘பாரத் டாக்ஸி சேவையில் ஓட்டுநர்களிடம் இருந்து கமிஷன் பெறப்படுவதில்லை. லாபம் முழுவதும் ஓட்டுநர்களுக்கே வழங்கப்படுகிறது.

- முறையான மற்றும் வெளிப்படையான பயணக் கட்டணம், கைப்பேசி வாயிலாக எளிய முன்பதிவு, வாகன கண்காணிப்பு, பல மொழிகளில் தகவல்கள், 24 மணி நேர நுகர்வோர் சேவை என பல்வேறு வசதிகளுடன் பாரத் டாக்ஸி இயங்கி வருகிறது.
- மகளிர் பயணிகளுக்கென மகளிர் ஓட்டுநர்களும் பணிய மர்த்தப்பட்டுள்ளனர்.
- தற்போது குறிப்பிட்ட சில பெரும் நகரங்களில் மட்டுமே அறிமுகமாகியுள்ள இந்தச் சேவை விரைவில் இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்ட நகரங்களுக்கும் விரிவுபடுத்தப்படவுள்ளது. 2026, மார்ச் 1-ஆம் தேதி நிலவரப்படி பாரத் டாக்ஸி தளத்தில் 21.34 லட்சம் பயனர்கள் மற்றும் 2.31 லட்ம் ஓட்டுநர்கள் பதிவு செய்துள்ளனர்.

6. மேற்காசிய போரின் தாக்கத்தால் சமையல் எரிவாயு சிலிண்டர் (எல்பிஜி) விநியோகத்தில் நெருக்கடி நிலவும் சூழலில், நகர்ப்புறங்களில் குழாய் வழி எரிவாயு (பிஎன்ஜி) விநியோக திட்டங்களுக்கு விரைந்து ஒப்புதல் வழங்க வேண்டும் என்று மாநில அரசுகளுக்கு மத்திய அரசு அறிவு றுத்தியுள்ளது.

(i) போர் முடிவுக்கு வரும் தென்படாத விலையில், மாநிலங்களுக்கு மேற்கண்ட அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. மின்சார அடுப்பு உள்பட மாற்று சமையல் வழிமுறைகளை ஊக்குவிக்கவும் மத்திய அரசு முயற்சிகள் மேற்கொண்டுள்ளது.

(ii)பீதியில் அதிகரிக்கும் பதிவுகள்:

- மேற்காசிய போருக்கு முன்பு எல்பிஜி சராசரி பதிவு 55 லட்சமாக இருந்த நிலையில், மக்களின் பீதியால் கடந்த மார்ச் 13-இல் இந்தப் பதிவு உச்சகட்டமாக 87.7 லட்சத்தை எட்டியது. கடந்த திங்கள்கிழமை இது 70 லட்சமாக குறைந்தது.
- கடந்த மார்ச் 13-ஆம் தேதி 62.5 லட்சம் சிலிண்டர்களும், மார்ச் 14-ஆம் தேதி 60 லட்சம் சிலிண்டர்களும் விநியோகிக்கப்பட்டுள்ளன. போருக்கு முன்பு விநியோக எண்ணிக்கை 50 லட்சமாக இருந்தது.
- வீடுகளுக்கான தேவையை பூர்த்தி செய்யும் அளவுக்கு போதுமான எல்பிஜி விநியோகம் உள்ளது என்ற அரசின் உறுதிமொழிக்குப் பிறகும் மக்கள் பீதியில் முன்பதிவு மேற்கொள்வது தொடர்கிறது.
- எல்பிஜி உள்நாட்டு உற்பத்தி 38 சதவீதம் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. எல்பிஜி விநியோகம் மீதான அழுத்தத்தைக் குறைக்க வணிக மற்றும் வீட்டு உபயோக எல்பிஜி பயன்பாட்டாளர்கள் குழாய் வழி இயற்கை எரிவாயுவை (பிஎன்ஜி) பயன்படுத்த ஊக்குவிக்கப்பட்டு வருகின்றனர்.

(iii) 12,000 இடங்களில் சோதனை :-

- நகர்ப்புற குழாய்வழி எரிவாயு விநியோக கட்டமைப்பை விரிவாக்கும் நடவடிக்கைகளும் முடுக்கி விடப்பட்டுள்ளன. இத்தகைய திட்டங்களுக்கு விரைந்து அனுமதி வழங்கும்படி அனைத்து மாநில அரசுகளுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.
- குழாய் வழி எரிவாயு விநியோகத்தில் நிலுவைத் திட்டங்களுக்கு தாமாக அனுமதி வழங்குதல், புதிய திட்டங்களுக்கு 24 மணிநேர காலக்கெடுக்குள் ஒப்புதல் அளித்தல், சாலை மறுசீரமைப்பு கட்டணங்களை ரத்து செய்தல், பணி வரம்புகளைத் தளர்த்துதல் உள்ளிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.
- எல்பிஜி சிலிண்டர்களின் பதுக்கல் மற்றும் கள்ளச் சந்தையில் விற்கப்படுவதைத் தடுக்க நாடு முழுவதும் 12,000 இடங்களில் சோதனை நடத்தப்பட்டு, 15,000 சிலிண்டர்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்றார் அவர்.
- முன்னதாக, குழாய் வழி எரிவாயு இணைப்பு பெற்றுள்ளவர்கள், எல்பிஜி சிலிண்டரை பயன்படுத்த தடை விதித்து மத்திய அரசு சில தினங்களுக்கு முன் உத்தரவிட்டது குறிப்பிடத்தக்கது.

7. 2033-ஆம் ஆண்டுக்குள் நாட்டில் உள்ள அனைவரும் காப்பீடு வரம்புக்குள் கொண்டுவரப்படுவர் என்று மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

(i) இதுதொடர்பாக மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின்போது எழுப்பப்பட்ட துணை கேள்விகளுக்கு அவர் அளித்த பதில்:

- நாட்டில் காப்பீடுத் துறை வேகமாக விரிவடைந்து வருகிறது. 2024-25-ஆம் நிதியாண்டில் 58 கோடி பேர் காப்பீடு வரம்புக்குள் கொண்டுவரப்பட்டனர். சுகாதார காப்பீடுக்கு மத்திய அரசு முன்னுரிமை அளிக்கிறது. 2033-ஆம் ஆண்டுக்குள் நாட்டில் அனைவரையும் மருத்துவக் காப்பீடு வரம்புக்குள் கொண்டுவந்து விடலாம் என்ற நம்பிக்கை மத்திய அரசுக்கு உள்ளது.
- கடந்த 3 ஆண்டுகளில் சட்டத்துக்குப் புறம்பாக செயல்பட்ட ரிலையன்ஸ் ஜெனரல் காப்பீட்டு நிறுவனம், ஹெச்டிஎஃப்சி, எஸ்பிஐ ஆயுள் காப்பீடு நிறுவனங்கள் உள்ளிட்ட தனியார் காப்பீடு நிறுவனங்களுக்கு ரூ.1 கோடி முதல் 2 கோடி வரை அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

(ii) முத்ரா கடன் ரூ.39.48 லட்சம் கோடி:

- கடந்த2022-ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் கடந்த ஆண்டு மார்ச் வரை, பிரதமரின் முத்ரா கடன் திட்டத்தின் கீழ், ரூ.15.50 லட்சம் கோடி கடன் அளிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இந்தக்

கடன் தொகையில் 65 சதவீதம் பெண் தொழில்முனைவோருக்கு அளிக்கப்பட்டுள்ளது.

- இந்தத் திட்டம் தொடங்கப்பட்ட 2015-ஆம் ஆண்டு முதல் இதுவரை, மொத்தம் ரூ.39.48 லட்சம் கோடி கடன் அளிக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இந்தக் கடன் தொகையில் சுமார் 2 சதவீதம் வாராக் கடனாக உள்ளது. வாராக் கடனை வசூலிக்க வங்கிகள் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றன. மிகப் பெரிய வங்கிக் கடன் திட்டங்களில் ஒன்றாக உள்ள முத்ரா கடன் திட்டம், கடனுக்குப் பிணை எதுவும் வழங்க இயலாத மக்களைச் சென்றடைந்துள்ளது.

(iii) நிறுவனங்களுக்கு ரூ.20 கோடி அபராதம்:

- நிறுவனங்கள் சட்டத்தின் கீழ், ஒரு நிதியாண்டில் பெருநிறுவன சமூகப் பொறுப்பு (சிஎஸ்ஆர்) செயல்பாடுகளுக்கு குறிப்பிட்ட வகையான லாபகர நிறுவனங்கள், தங்கள் 3 ஆண்டு வருடாந்திர சராசரி லாபத்தில் குறைந்தபட்சம் 2 சதவீதத்தை செலவிட வேண்டும். சிஎஸ்ஆர் செலவினம் தொடர்பான ஒவ்வொரு முடிவும் நிறுவனங்களின் வாரியத்தை சார்ந்ததாகும்.
- சிஎஸ்ஆர் நிதிக்கு எவ்வளவு செலவிட வேண்டும், எங்கு செலவிட வேண்டும் என்பதை நிறுவனமும், அதன் வாரியமும்தான் முடிவு செய்யும். அதில் மத்திய அரசு தலையிட முடியாது. சிஎஸ்ஆர் விதிமுறைகளைப் பின்பற்றாத நிறுவனங்கள் மீது நிறுவனங்கள் சட்டம் 2013 பிரிவுகளின் கீழ், நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. அதன்படி சிஎஸ் ஆர் விதிமுறைகளை மீறியதற்காக 2022-23- ஆம் நிதியாண்டில் 6 நிறுவனங்கள் மீது ரூ.2.97 கோடி, 2023-24-இல் 11 நிறுவனங்கள் ரூ.3.32 கோடி, 2024-25-இல் 13 நிறுவனங்கள் மீது ரூ.13.65 கோடி அபராதம் விதிக்கப்பட்டது என்றார்.

8. இந்தியாவின் அயல்நாட்டு முதலீட்டுக் கொள்கைகளின் பரிணாம வளர்ச்சி—குறிப்பாகச் சீன முதலீடுகள் குறித்த இந்தியாவின் மாறிவரும் நிலைப்பாடு :-

(i) ஆரம்பக்கட்டக் கட்டுப்பாடுகள் (ஏப்ரல் 2020)

- பத்திரிக்கைக் குறிப்பு 3 (Press Note 3): ஏப்ரல் 2020-இல், கோவிட்-19 பெருந்தொற்றின் உச்சக்கட்டத்தில் இருந்தபோது, மத்திய அமைச்சரவை "பத்திரிக்கைக் குறிப்பு 3" என்றழைக்கப்படும் ஒரு வழிகாட்டுதலை வெளியிட்டது.
- நில எல்லைக் கொள்கை: இந்தியாவுடன் நில எல்லையைப் பகிர்ந்துகொள்ளும் நாடுகளிலிருந்து (சீனா, வங்கதேசம், பாகிஸ்தான், நேபாளம், மியான்மர், பூடான் மற்றும் ஆப்கானிஸ்தான் உட்பட) வரும் எந்தவொரு முதலீட்டிற்கும், அரசின் கட்டாய ஒப்புதல் தேவை என்பதை இந்த ஆணை வலியுறுத்தியது.
- பெருந்தற்றால் ஏற்பட்ட பொருளாதார மந்தநிலையைப் பயன்படுத்தி, சீன நிறுவனங்கள் இந்திய வணிகங்களை 'பகைமை ரீதியாகக் கையகப்படுத்துவதை' (hostile takeovers) தடுப்பதே இந்த நடவடிக்கையின் முதன்மை நோக்கமாகும்.

(ii) பொருளாதாரக் கூற்றுகள் (2023–2024)

- 2023-24 ஆம் ஆண்டிற்கான பொருளாதார ஆய்வறிக்கை, சீனாவுடனான இந்தியாவின் வர்த்தகப் பற்றாக்குறையில் ஏற்பட்டுள்ள கவலைக்குரிய அதிகரிப்பைச் சுட்டிக்காட்டியது.
- இந்தப் பற்றாக்குறையைக் குறைப்பதற்கான ஒரே வழி, சீன நிறுவனங்கள் இந்தியாவிற்குள்ளேயே உற்பத்தி அலகுகளை அமைத்துக்கொள்ள அனுமதிப்பதே என்று தலைமைப் பொருளாதார ஆலோசகர் அனந்த நாகேஸ்வரன் குறிப்பிட்டார். இந்தியா உள்ளூர் உற்பத்தியை அனுமதிக்காவிட்டால், காலப்போக்கில் அது சீனாவிடம் பொருளாதாரக் கடன் சார்ந்த நிலைக்குத் தள்ளப்படும் என்று அவர் எச்சரித்தார்.

(iii) சமீபத்திய கொள்கை மாற்றம் (மார்ச் 2026)

- கடந்த வாரம், 2020-ஆம் ஆண்டின் கொள்கையில் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றத்தை மத்திய அரசு அறிவித்தது.
- திருத்தப்பட்ட விதிகளின்படி, எல்லைகளைப் பகிர்ந்துகொள்ளும் நாடுகளிலிருந்து வரும் 10% வரையிலான 'நேரடி அயல்நாட்டு முதலீட்டிற்கு' (FDI) தற்போது அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
- உள்கட்டமைப்பு, இயந்திரங்கள் மற்றும் மின்னணு உதிரிபாகங்கள் சார்ந்த முதலீடுகளுக்கு

60 நாட்களுக்குள் ஒப்புதல் வழங்குவதாக அரசு உறுதியளித்துள்ளது.

(iv) முக்கிய வாதங்களும் உத்திசார் உண்மைகளும்

- சீனா உலகின் உற்பத்தி மையமாகவும், இரண்டாவது மிகப்பெரிய பொருளாதாரமாகவும் திகழ்வதால், சீன வர்த்தகத்தையும் தொழில்நுட்பத்தையும் முழுமையாகப் புறக்கணித்துக்கொண்டு, ஒரு பொருளாதார வல்லரசாகத் திகழும் தனது இலக்கை இந்தியாவால் அடைய இயலாது.
- மின்னணுவியல் மற்றும் அரிய வகை கனிமங்கள் சார்ந்த துறைகளில், இந்தியாவுக்கு தற்போது தேவைப்படும் மேம்பட்ட உற்பத்தித் தொழில்நுட்பங்களையும், மிகச்சிறந்த திறன்மிக்க மனிதவளத்தையும் சீனா தன்னகத்தே கொண்டுள்ளது.
- மேற்கத்திய நாடுகளில் நிலவும் கணிக்க முடியாத அரசியல் சூழலைக் கருத்தில் கொண்டு (குறிப்பாக "டிரம்ப் அணுகுமுறையை" சுட்டிக்காட்டி), பொருளாதார வளர்ச்சிக்காக இந்தியா இனி அமெரிக்காவையோ அல்லது ஐரோப்பாவையோ மட்டுமே முழுமையாகச் சார்ந்திருக்க இயலாது.
- சீன மூலதனம் பெரும்பாலும் சிங்கப்பூர், தென் கொரியா அல்லது ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள நிறுவனங்கள் வழியாக மறைமுகமாக இந்திய சந்தையில் நுழைவதால், அதை முழுமையாகத் தடுப்பது கிட்டத்தட்ட சாத்தியமற்றது.

(v) தவறவிடப்பட்ட முக்கிய வாய்ப்புகள் :-

- கிரேட் வால் மோட்டார்ஸ்: எதிர்பார்க்கப்பட்ட 1 பில்லியன் டாலர் முதலீடு முடக்கப்பட்டது.
- BYD: மின்சார வாகனங்கள் மற்றும் மின்கலன்களின் முக்கிய உலகளாவிய உற்பத்தியாளர்கள் இந்தியாவில் செயல்படுவதிலிருந்து தடுக்கப்பட்டனர்.

(vi) முடிவுரை மற்றும் கண்ணோட்டம்

- சீன முதலீடு தானாகவே தேசியப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையும் என்ற அச்சம் "தேவையற்றது" மற்றும் "அர்த்தமற்றது". அரசாங்கம், உண்மையிலேயே முக்கியத்துவம் வாய்ந்த துறைகளைக் கண்டறிந்து அவற்றைக் கட்டுப்படுத்த வேண்டும், அதே நேரத்தில் உற்பத்தி, ஏற்றுமதி மற்றும் வேலைவாய்ப்பை அதிகரிக்க மற்ற துறைகளைத் திறந்துவிட வேண்டும்.
- முதலீட்டிற்கான "கதவுகளைத் திறக்க" வாதிடும் அதே வேளையில், இந்தியா "கடன் வலையில்" சிக்காமல் முதலீடுகளை ஈர்ப்பதை உறுதிசெய்ய விழிப்புடன் இருக்க வேண்டும்